## அரசாங்க சேவை ஆணைக்குழு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் அதிஉயர் தர சேவை வகுதிக்குரிய சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிகள் 69 ஐ திறமை அடிப்படையில் நிரப்புவதற்காக, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, தற்போது செயலூக்கமுள்ள சேவையில் உள்ள அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள்:**

   I. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I இல் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் செயலூக்கமுள்ள சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   II. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II இற்குரிய வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

   III. நடைமுறை விதிக் கோவையின் 236 ஆம் பிரிவின்படி திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பதவியுயர்வு முறை:**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இல.PSC/EST/04-03/01/2025 மற்றும் 2026.06.12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் பணிப்புக்கு இணங்க, இந்த ஒரு சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் அமையுமாறு, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாகத் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இப்பதிவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

4. புள்ளிகள் வழங்கும் திட்டம்

| தொ. இல | புள்ளிகள் வழங்கும் துறைகள் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக சேவை அனுபவத்திற்காக**<br><br>(தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச சேவைக்காலத்திற்கு மேலதிகமான சேவைக்காலத்திற்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், அந்த மேலதிக சேவைக்காலத்திற்கான புள்ளிகளை வழங்கும்போது, அதிகூடிய மேலதிக சேவைக்காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு விகிதாசார அடிப்படையிலும் மேலதிக சேவைக்காலத்திற்கான புள்ளிகள் வழங்கப்படும்).<br><br>➢ ஏனைய உத்தியோகத்தர்களுக்கான மேலதிக சேவை காலம் =<br><br>(மேலதிக சேவைக் காலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச புள்ளிகள் / சேவை அனுபவம் அதிகம் உள்ள உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடங்கள் X12+ மாதங்கள்)) X ஏற்புடைய உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடங்கள் X12+ மாதங்கள்) | 50 | ஏற்புடையதன்று |

| | | | |
|---|---|---|---|
| 02 | **திறமை**<br><br>நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் பாடத்துறைகளின் கீழ், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 01 இன் பிரகாரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>I. சர்வதேச விமானப் பயண ஒழுங்குவிதிகள் மற்றும் சர்வதேச விமானச் சேவைத் தரநிலைகள் பற்றிய பரந்த புரிதலை வெளிப்படுத்துவதுடன், அது தொடர்பான நியாயத்தன்மையை தர்க்கரீதியில் தெளிவாக விவரிப்பதற்கான திறன்.<br>II. விமானப் பயணங்கள் தொடர்பாக இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒப்பந்தங்களின் ஏற்பாடுகள் பற்றிய பரந்த புரிதல்.<br>III. குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய பரந்த புரிதல் மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் நியாயத்தன்மையை தர்க்க ரீதியில் தெளிவாக விவரிப்பதற்கான திறன்.<br>IV. நாட்டிற்குள் பிரவேசிக்க எதிர்பார்க்கும் நபர்களின் அடையாளம், ஆவணங்கள் மற்றும் நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகளின் பிரதான படிமுறைகளில் காணப்படும் நியாயத்தன்மையை தர்க்க ரீதியில் தெளிவாக விவரிப்பதற்கான திறன்.<br>V. அசாதாரண நடத்தைகளை அவதானிப்பதற்கும் கண்டறிவதற்கும் மற்றும் விரைவாகப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்குமான திறன்.<br>VI. பொதுமக்கள் சட்டப்பூர்வமாகப் பயணிப்பதை இலகுபடுத்துவதற்காக, அடையாளம் மற்றும் பயண ஆவணங்களின் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய பரந்த புரிதல்.<br>VII. விண்ணப்பப் படிவத்தின் நோக்கத்தைத் தீர்மானிப்பதற்காக, பல்வேறு மூலங்கள் ஊடாகத் தகவல்களை செல்லுபடியாக்குவதன் மூலம் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான திறன்.<br>VIII. புலனாய்விற்கு உதவுவதற்காக, வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற குறிப்புகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதற்கான திறன்.<br>IX. பொதுவாக சிதைக்கப்பட்ட அல்லது மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட அடையாளம் / கடவுச்சீட்டு ஆவணங்களின் அம்சங்களைத் துல்லியமாகக் கண்டறிவதற்கான திறன்.<br>X. அடையாளம் / கடவுச்சீட்டு ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்காக தொழில்நுட்ப வளங்களை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பயன்படுத்தல். | 50 | 25 |

5. பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்:

அ.நி.சு 10/2025 பிரகாரம் MN 7 -2025, ரூ.71,240 – 11 X 1,360- 18 X 1,850 – 119,500/-

ஆரம்ப சம்பளப் படிமுறை - படிமுறை 06 - ரூ.78,040/-

6. **நியமிக்கப்படவுள்ள சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 69 ஆகும்.**

a. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் தகைமை வரிசைக்கிரமத்திற்கு அமைவாகவும் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவும் பதவி வெற்றிடங்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

b. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் அதே சந்தர்ப்பத்திலேயே அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலிப்பதும் மேற்கொள்ளப்படும்.

c. நேர்முகப் பரீட்சைகளில் பங்குபற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒன்றாகக் கருதப்படமாட்டாது.

7. இறுதி வெற்றிடத்திற்காக அல்லது இறுதி சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2019 (II) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட மேலதிக தகைமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். அதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மதிப்பீட்டு அளவீடுகள் மற்றும் புள்ளித் திட்டங்கள் பயன்படுத்தப்படும். ஏற்புடைய விண்ணப்பதாரர்களுக்கு இந்த மதிப்பீட்டு அளவீடுகள் மற்றும் புள்ளித் திட்டங்கள் குறித்து அந்தச் சந்தர்ப்பத்தில் அறியத்தரப்படும்..

8. இந்தப் பதவி உயர்வு நடைமுறைக்கு வரும் திகதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியாகும்.

9.

I. சேவை நிபந்தனைகள்:

a. அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், 2013.12.20 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் அதிஉயர் தர சேவை வகுதிக்குரிய சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் உட்பட்டு, தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

b. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது.

II. வேறு நிபந்தனைகள்

a. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களிலும் தங்களது கடமைகளை ஆற்றுவதற்குப் கடமைப்பட்டவர்களாவர்.

b. ஏற்புடைய பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் பிரகாரம் அவசியமான தேர்ச்சிகள் மற்றும் திறமைகளையும் அனைத்து உத்தியோகத்தர்களும் உரியவாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

c. ஒவ்வொரு நியமனம் தொடர்பாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளும் பொருந்தும்.

d. தேவையேற்படின், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியான 2026.07.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு (நிர்வாகம்) கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டி.டபிள்யு.ஆர்.பீ. செனவிரத்ன
செயலாளர்
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

# மாதிரி விண்ணப்பப்படிவம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

(பிரதிக் கட்டுப்பாட்டாளர் (இறங்குதுறைகள்) மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..............................................................

..............................................................

**(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)**

1.2 முதலெழுத்துகளை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..............................................................

..............................................................

**(உதாரணம்: GUNAWARDANA H.M.S.K.)**

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்): ..............................................................

..............................................................

02. பால்நிலை (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக):
ஆண் - 0
பெண் - 1 ☐

03. தேசிய அடையாள அட்டை இல

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. கையடக்க தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

05. பிறந்த திகதி: ..............................

06. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

07. பெற்றுக்கொண்டுள்ள அதிகூடிய கல்வித் தகைமைகள்:

..............................................................

08. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தராக சேவைக்கு இணைந்த திகதி : ..............................
- (i) தற்காலிக / உதவி பதவி ; ..............................
- (ii) நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி ;..............................
- (iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு நிரந்தர சேவைக் காலம் ;..............................
- (iv) அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் 1 சேவைக் காலம் ; வருடங்கள் ..............................
- (v) அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II சேவைக் காலம் ; வருடங்கள் ..............................
- (vi) செயலூக்கமுள்ள சேவைக் காலம் : வருடங்கள் ..............................

(சம்பளமற்ற லீவுக்காலம் தவிர்ந்த சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே கடமையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலம்.)

09. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த திகதி : ..............................

10. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் 1 க்கு பதவி உயர்வுப்பெற்ற பின்னர் தரம் 1 இல் 05 வருட சம்பள ஏற்றம் உழைக்கப்பட்டுள்ளதா? ..............................

11. சம்பள ஏற்றம் உழைத்தல் பற்றிய தகவல்கள்

| சம்பள ஏற்றத் திகதி | சம்பள ஏற்றம் உழைக்கப்பட்டுள்ளது / உழைக்கப்படவில்லை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

12. செயலாற்றுகை மதிப்பீட்டு மட்டம்

| வருடம் | மதிப்பீட்டு மட்டம் (திருப்பதியற்றது, திருப்திகரமானது, சாதாரண மட்டத்திற்குமேல், சிறப்பானது. |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

13. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட காலப் பகுதியில் எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்றுத் தண்டணைக்கு உட்பட்டுள்ளீரா?
(அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனைப்பெற்றிருத்தல் ஆகாது)

14. வேறு ...........................................................................

15. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை மற்றும் உண்மையானவை என உறுதியுரைக்கின்றேன்.

திகதி:............................ ........................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

16. **திணைக்களத் தலைவரினால் பூரணப்படுத்தல் வேண்டும்.**

**செயலாளர்,**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

திரு / திருமதி ..................................................... அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், தனிப்பட்ட கோப்பில் உள்ள தகவல்களின்படி சரியானது / தவறானது ஆகும். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை / எடுக்கப்பட்டுள்ளது என்பதையும், அத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்க உத்தேசிக்கப்படவில்லை / உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I இல் உடன் முன்னரான 05 வருடங்களுக்கான சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ளார் / ஈட்டவில்லை என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி: ........................ ....................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவிப்பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

17. **அமைச்சு செயலாளரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.**

செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,

அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I . திரு / திருமதி ..........................................................அவர்களின் கடமைகள் மற்றும் நடத்தை குறித்த திணைக்கள/ நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் உடன்படுகின்றேன் / உடன்படவில்லை.

திகதி: ............................ ....................................................

செயலாளர்,
......................................... அமைச்சு
உத்தியோகபூர்வ முத்திரை